திரு பெ. சு. திருவேங்கடம். தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சாலைகள் மட்டுமல்லாமல் மற்ற சாலைகளும் வடாற்காடு மாவட்டத்தில் பழுது பார்க்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதை விரைவுபடுத்த அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த ஆண்டிலே முயற்சிகள் எடுக்கப்படும்.

கிராமப்புற வீட்டுவசதித் திட்டம்.

*வினா எண் 43. திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராமப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் வழங்கும் கடன்களின் உயர்ந்த பட்ச அளவு ரூ. 3,000 என்பதை ரூ. 5,000 ஆக உயர்த்தும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் வழங்கப்படும் கடன் தொகை ரூ. 3,000-லிருந்து ரூ. 3,750 ஆக சமீபத்தில்தான் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இதனை மேலும் ரூ. 5,000 ஆக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களிலிருந்து அதிகமாக தாழ்த்தப்பட்ட மக்கள்தான் கடன் பெறுகிறார்கள். குறைந்த பட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காவது 5,000 ரூபாய் அளவுக்கு உயர்த்திக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, எல்லோருக்கும் பொதுவாகத்தான் 3,750 ரூபாய் என்பது.

திரு கு. பா. பழனியப்பன்: தலைவரவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறுவதற்காகப் போடப்படும் மனுக்களை விரைவிலே பைசல் செய்வதற்கு சட்ட ஆலோசகரை முழுநேர ஊழியராக நியமிக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வீடு கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்குவது பற்றியது. சட்ட ஆலோசகர்கள் போடுவது பற்றி அல்ல. ஆகவே அந்தக் கடன் சம்பந்தப்பட்ட மட்டிலும்தான் கேள்வி கேட்க வேண்டும்.

திரு கு. பா. பழனியப்பன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கடன் சம்பந்தமாகத்தான் கேட்கிறேன். அந்தக் கடன் மனுக்களை உடனடியாகப் பரிசீலனை செய்து அதைப் பைசல் செய்வதற்கு சட்ட ஆலோசகர்களை நிரந்தர அடிப்படையில் நியமிக்கின்ற வகையில் திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களில் இருக்கின்ற வீடுகள் அடிக்கடி நெருப்பு பிடித்து எரிந்து விடுகின்றன. அதற்கு அரசாங்கம் நிவாரணம் கொடுக்கின்றது. ஆனால் அதுமட்டுமல்லாமல் இந்தக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அவர்களுக்கும் கடன் கொடுத்து அந்த வீடுகளைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்.: பேரவைத்தலைவரவர்களே, கடனை நாம் கொடுத்துவிடுகிறோம். அவர்களே வீட்டைக் கட்டிக் கொள்கிறார்கள்.

திரு. க. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் கடன் வழங்கிக் கொண்டிருக்கின்றது அரசு. இந்தக் கடன் தொகையைப் பொறுத்தவரையில் அதனை 3,750 ரூபாய்க்கு மேல் உயர்த்துவதில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தத் தொகையிலே அரிசனங்களுக்கு மானியமாகக் கொடுக்கிறார்கள். அந்த மானியத் தொகையை ஆரம்பத்திலேயே குறைத்துக்கொண்டு மீதிப் பணத்தைத்தான் கொடுப்பதாகத் தகவல் வருகிறது. இதை அரசு உடனடியாகக் கவனிக்குமா? அப்படிப்பட்ட உத்தரவுகளை மாற்றியமைக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, அப்படி இருந்தால் அது கவனிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே கேள்வி கடன் ரூபாய் 3,000-லிருந்து ரூபாய் 5,000-ஆக உயர்த்தப்படுமா என்பது. முன்பு அந்தக் கடன் 5,000 ரூபாயாகத்தான் இருந்தது. சிறிது காலத்திற்கு முன்புதான் அதை 2,400 ரூபாயாகக் குறைத்தார்கள். அதன் பின்னர் அதை 3,000 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். பின்னர் 3,750 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். 3,750 ரூபாய் என்பது எஸ்டிமேட் தொகைதான். அதிலே 3,000 ரூபாய்தான் கடன். மீதி 750 ரூபாயை அவர்கள் வேலை செய்து கழிக்கவேண்டும்

ஆகவே முன்பு இருந்த மாதிரி இந்தக் கடனை 5,000 ரூபாயாக மாற்றவேண்டும். ஏனென்றால் இது போதுமான தொகை அல்ல. ஆகவே இந்தக் கடனை ரூபாய் 5,000-ஆக உயர்த்துவதற்கு அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி ரூபாய் 3,750 என்பது வீட்டினுடைய மதிப்பு. அதிலே ரூபாய் 750 தொழிலாளர்களுடைய உழைப்பு என்ற வகையில் 20 சதவீதம் போய்விடுகிறது. மீதம் உள்ள ரூபாய் 3,000-இல் அரிசனங்கள் அல்லாதவர்களுக்கு ரூபாய் 3,000 கடனாகவும் அரிசனங்களாக இருப்பவர்களுக்கு 2,000 ரூபாய் கடனாகவும் ஆயிரம் ரூபாய் மானியமாகவும் கொடுக்கப்படுகிறது. இப்போதுள்ள சூழ்நிலையில் இதற்கு மேல் கொடுப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலம் கடன் வழங்கப்படுகின்றபோது அதிலே மொத்தம் இவ்வளவு பேருக்கு இவ்வளவு ரூபாய்தான் கடன் கொடுக்கப்படும் என்று வரையறை இருக்கின்றதா? அல்லது விண்ணப்பிக்கின்ற அத்தனை பேர்களுக்கும் கடன் கொடுக்க அரசு உத்தரவிட்டிருக்கின்றதா?

[முற்பகல் 9.10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணப்பித்திருக்கும் அனைவருக்கும் பணம் இருக்கும் அளவிற்கு தக்கபடி கொடுக்கப்பெறுகிறது. இத்தனை பேருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சட்டம் ஏதும் இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டிற்கு அந்தக் கடன் தொகை உயர்த்திக் கொடுக்கப் பெற்றிருக்கிறது. ஏற்கெனவே 78-79, 79-80ஆம் ஆண்டுகளில் கடன்பெற்றுக் கொண்டு, வீடுகள் இன்னும் கட்டி முடிக்கப் பெறாத நிலையில் உள்ளவர்களுக்கும் இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கும் தொகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.